★ பக்கங்கள் 8 விலை சதம் 40

# ஈழநாடு

The EELANADU

Registered as a Newspaper at the General Post Office.
Sri Lanka Under No QB/8945/78

மலர் 21 ஆவணி 13 ஷவ்வா 5 இதழ் 198
யாழ்ப்பாணம் புதன்கிழமை 29-8-79

துரித மீட்டல் வகுப்புகள்

G. C. E. A/L
1980 ஏப்ரல்

- சனி, ஞாயிறு வகுப்புகள்
- காலை முழுநேர வகுப்புகள்

ஆரம்பம் 1-9-79

லோகநாதன் இன்ஸ்ரிரியூட்,
166/1, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்

மவுண்பேட்டன் மரணம்:

## "நாங்களே பொறுப்பு"

லண்டன், ஆக. 28

மவுண்ட்பேட்டன் பிரபுவின் மரணத்திற்கு நாங்களே காரணம் என்று ஐரிஷ் தேசிய விடுதலை முன்னணி அறிவித்துள்ளது.

நேற்று இரவு அயர்லாந்தில் இடம்பெற்ற குண்டு வீச்சு சம்பவத்தில் 16 பிரிட்டிஷ் படை வீரர்கள் கொல்லப்பட்டனர் என்றும் இந்த முன்னணி அறிவித்துள்ளது.

(இ)

# பகிஷ்கரிப்பு கைவிடப்பட்டது!

# திருப்திகரமான தீர்வு -- 'அமிர்'

## தமிழர் விடுதலைக் கூட்டணி

### 4-ந் திகதி பாராளுமன்றம் செல்லும்

(நமது கொழும்பு நிருபர் எஸ் மகாலிங்கசிவம்)

**ஜனாதிபதி திரு. ஜே. ஆர். ஜயவர்த்தனாவுக்கும், தமிழர் விடுதலைக் கூட்டணிக்குமிடையே நேற்று நடைபெற்ற சுமுகமான பேச்சுவார்த்தைகளைத் தொடர்ந்து ஏற்பட்ட சமரசமான முடிவை அடுத்து பாராளுமன்றத்தைத் தொடர்ந்து பகிஷ்கரிக்கும் தீர்மானத்தை, தமிழர் விடுதலைக் கூட்டணி வாபஸ் பெற்றுள்ளது!**

பாராளுமன்றம் மீண்டும் அடுத்தமாதம் நான்காம் திகதி கூடும் போது தமிழர் விடுதலைக் கூட்டணி எம். பிக்கள் அனைவரும் பாராளுமன்றத்தில் மீண்டும் அடி எடுத்து வைப்பார்கள்.

சர்ச்சைக்குரிய வவுனியா விவகாரம் தொடர்பாக நேற்றுக்காலை ஜனாதிபதி அலுவலகத்தில் ஜனாதிபதி தலைமையில் நடைபெற்ற பேச்சுவார்த்தைகளில் கூட்டணி சார்பாக, செயலாளர் நாயகம் திரு அ. அமிர்தலிங்கம், கூட்டணித் தலைவர் திரு எம் சிவசிதம்பரம், வவுனியா எம் பி திரு ரி சிவசிதம்பரம், முல்லைத்தீவு எம் பி திரு எக்ஸ் எம் செல்லத்தம்பு, திருகோணமலை எம் பி திரு சம்பந்தர் ஆகியோர் கலந்துகொண்டனர்.

பேச்சுவார்த்தைகள் நேற்றுக்காலை சுமார் ஒரு மணி நேரம் வரை நடைபெற்றது.

வவுனியா விவகாரம் தொடர்பான சகல அரசாங்க உயர் அதிகாரிகளும் இப் பேச்சுவார்த்தைகளில் கலந்து கொண்டனர்.

காலையில் நடைபெற்ற இச்சந்திப்பின் எதிரொலியாக நேற்றுப் பிற்பகல் அமிர்தலிங்கம் வீட்டில் கூட்டணியின் பாராளுமன்றக்குழு கூடி நிலைமையை நீண்ட நேரம் வரை ஆராய்ந்தது. முடிவில் கூட்டணியின் பாராளுமன்றக்குழு எடுத்துக்கொண்ட ஏகமனதான தீர்மானத்துக் கிணங்க பாராளுமன்ற பகிஷ்கரிப்பைக் கைவிடுவதென்றும், மீண்டும் அடுத்தமாதம் நான்காம் திகதி பாராளுமன்றம் கூடும்போது பாராளுமன்றம் செல்வதென்றும் தீர்மானிக்கப்பட்டது.

நேற்றைய சந்திப்பு பற்றி திரு அமிர்தலிங்கத்திடம் கேட்டபோது, "திருப்திகரமான முறையில் இப்பிரச்சினை தீர்க்கப்பட்டுள்ளது.

[8-ம் பக்கம் பார்க்க]

## "அரசியலில் எதுவும் எப்போதும் நிகழலாம்"

### தமிழக முதல்வர் எம். ஜி. ஆர். பேட்டி

[தஞ்சாவூர்]

"தற்போதைய எமது நிலையில் எந்தவிதமான மாற்றங்களும் இல்லை. ஆனாலும் அரசியலில் எதுவும் எந்த நேரத்திலும் நிகழலாம்" என்று தமிழக முதலமைச்சர் திரு எம் ஜி ராமச்சந்திரன் கருத்து வெளியிட்டுள்ளார்.

தஞ்சாவூருக்கு விஜயம் செய்திருந்த தமிழக முதல்வர் நேற்று பத்திரிகை நிருபர்களுக்கு பேட்டி அளித்தார். இச்சந்திப்பில் நிருபர்கள், அரசியல் முக்கியத்துவம் வாய்ந்த கேள்விகளைக் கேட்டனர்.

"தற்போதைய நிலையையே நீங்கள் தொடருவீர்களா?" இவ்விதமாக ஒரு நிருபர் கேட்டபோது;

"தற்போதைய நிலையில் மாற்றமில்லை. ஆனால், இதுவே நிரந்தரமாக இருக்குமென்றும் உறுதியாகக்கூற இயலாது தேர்தலுக்குமுன்னர் ஏற்படும் சூழ்நிலைகளைப் பொறுத்து அ இ அ தி மு கழகத்தின் நிலையிலும் மாற்றம் ஏற்படும். அரசியலில் எதுவும் நிகழலாம்" என்று தமிழக முதல்வர் திரு எம் ஜி ராமச்சந்திரன் பதிலளித்தார்.

யாழ்.பஸ் நிலையத்தில் ஒரு கோரச் சம்பவம்:

## பஸ்ஸில் ஏற முயன்ற பிரயாணி துடிதுடித்து மரணம்!

[யாழ்ப்பாணம்]

மருந்து வாங்கிக்கொண்டு வீட்டுக்குப் போவதற்காக பஸ்ஸில் ஏற முற்பட்டதாகக் கூறப்படும் ஓய்வு பெற்ற அரசாங்க உத்தியோகத்தர் ஒருவர், அதே பஸ்ஸால் நெரியுண்டு மரண

(8-ம் பக்கம் பார்க்க)

## மாணவர் அவைத் தலைவர் கூறுகிறார்

(யாழ்ப்பாணம்)

யாழ் பல்கலைக்கழக மாணவர் அவைத் தலைவர் செல்வன் எஸ் செல்வேந்திரராஜா, 'ருக்கிங்' தொடர்பாக யாழ். பல்கலைக்கழக மாணவர் இலர் இடைநிறுத்தம் செய்யப்பட்டுள்ளதாக கடந்த ஞாயிறு ஈழநாடு இதழில் வெளிவந்த செய்தி குறித்து பின்வருமாறு தெரிவித்துள்ளார்;

"யாழ். பல்கலைக் கழகத்தில் 'ருக்கிங்' சம்பவம் தொடர்பாக 9 மாணவர்கள் இடைநிறுத்தம் செய்யப்பட்டுள்ளனர் என்ற செய்தியை பத்திரிகைகள் வாயிலாக அறிந்தோம். இந்த இடைநிறுத்தல் குறித்து சம்பந்தப்பட்ட மாணவர்களுக்கு இதுவரை எதுவித அறிவித்தலும் கொடுக்கப்படவில்லை

(இ)

## செய்தித் தணிக்கை

கடந்த மாதம் நடுப்பகுதியில் அமுலுக்குக் கொண்டுவரப்பட்ட செய்தித் தணிக்கை, தொடர்ந்து அமுலில் இருந்து வருகிறது. "ஈழநாடு" பத்திரிகையில் வெளிவரும் சகல செய்திகளும் தணிக்கைக்குள்ளாகியே பிரசுரமாகின்றன.

மேர்ச்சன்ட் பினன்ஸ் லிமிட்.

இன்று தொடக்கம்
சேவையில் ஈடுபடுகிறது.

வருடம் 24% வரை

வட்டியைப் பெறுங்கள்

இதன் விபரங்களுக்கும், ஏனைய சேவைகளின் விபரங்களுக்கும் கீழ்க்கண்ட விலாசத்துடன் தொடர்பு கொள்ளவும்.

129, கோயில் வீதி, யாழ்ப்பாணம்.

செ. லோகநாதன்
தலைவர்.

## வரி விளம்பரம்

### விற்பனைக்கு

50 முட்டைகள் தொடக்கம் 500 முட்டைகள் அடைக்கக்கூடிய அளவுகள் கொண்ட மின்சாரத்திலும் மண்ணெண்ணெயிலும் இயங்கக்கூடிய அடைகாப்பொறிகள் (Incubator) பல தரங்களில் உண்டு. விபரங்களுக்குத் தபால் மூலம் தொடர்புகொள்ளவும் "லிலி" கோழிப்பண்ணை, ஆஸ்பத்திரி வீதி, மண்டைதீவு 3430

ஒரு பரப்புக் காணி இரண்டு அறை வீடு, கிணற்றுடன் விற்பனைக்குண்டு. விலை ரூபா 45,000 விபரங்கட்கு: வே. சுப்பையா, சந்திரசேகரப் பிள்ளையார் கோவில் ஒழுங்கை, நல்லூர். 3433

பலாலி பிரதான வீதியில் பலாலி அம்மன் கோவிலுக்குப்போகும் நாற்சந்தியில் 15 பரப்புக் காணி கிணற்றுடன் விற்பனைக்குண்டு கடை, வீடு, படமாளிகை போன்றவை கட்ட உகந்த இடம். பிரித்தும் கொடுக்கப்படும். S. சதாசிவம், செல்லத்துரை வீதி, உரும்பராய் தெற்கு. 3410

### பயிற்சி

வெளிநாடுகளில் தொழில்கள் பெறுவதற்கு நவீன முறையில் பயிற்சிகள் வெல்டிங் (Electric Arc & Gas) இலெக்றிக் வயறிங் றேடியோ (Transistor) Building Technology P M. G. Certificate முதலிய பயிற்சிகளுக்கு National Institutes, 57, பாங்சோல் வீதி, யாழ்ப்பாணம். 3369

**வியாபாரம் பெருக விளம்பரம் செய்க**


## ஜனதா வேட்பாளர் பட்டியல்

புதுடில்லி, ஆக 28

எதிர்வரும் இந்திய தேர்தலில் ஜனதா 542 தொகுதிகளில் போட்டியிடும் என்று ஜனதா கட்சியின் பொதுச் செயலாளர் திரு நானாஜி தேஷ்முக் தெரிவித்துள்ளார்.

வேட்பாளர் பட்டியல் அடுத்தமாத இறுதியில் வெளியிடப்படும் என்றும் அவர் கூறினார். [உ]

## இடமாற்றம்

[சாவகச்சேரி]

5 வருடங்களுக்கு மேலாக மிருசுவில் விசாரணைப் பங்கின் கட்டளைக்குருவராகக் கடமையாற்றிவந்த வண. பிதா. பற்றிக் ஞானப்பிரகாசம் அடிகளார் பரந்தன் பங்குக் கட்டளைக்குருவராக இடமாற்றம் பெற்றுச் சென்றுள்ளார். தற்போது மிருசுவில் விசாரணைப் பங்கை முகமாலை பங்குக் கட்டளைக்குருவர் வண. பிதா. ஜி எவ் துரைசிங்கம் அடிகளார் கவனித்துவருகின்றார். [அ]

## வானொலியில் இன்று

[யாழ்ப்பாணம்]

தென்னிந்திய மிருதங்கவித்துவான் தஞ்சாவூர் உபேந்திரனின் மிருதங்க இசையை இன்றிரவு 9-45 மணிக்கு இலங்கை வானொலியில் கேட்கலாம். சங்கீதவித்துவான் திரு ஏ. கே. கருணாகரனின் கச்சேரிக்கு இவர் மிருதங்கம் வாசிக்கிறார். [கொ-உ]


**காணி தேவை**

யாழ் நகரில் அல்லது சுற்றாடலில் நன்னீர், மின்சாரம் பெறத்தக்க 2 அல்லது 3 பரப்பு வெறும் காணி தேவை. தொடர்புகொள்க:

N. KANAGASURIAR
44, International
Budhist Centre Road,
3132 Wellawatta


## வாழ்வில் விரக்தி: இளைஞர் உயிரை மாய்த்தார்

[புலோலி]

வாழ்க்கையில் விரக்தி ஏற்பட்ட இளைஞர் ஒருவர் கிருமிநாசினி அருந்தித் தற்கொலை செய்துகொண்டார். வல்வெட்டித்துறையைச் சேர்ந்த திருவில் என்னும் இடத்தில் இச்சம்பவம் நடைபெற்றுள்ளது.

தம்பிராசா அமரசிகாமணி (வயது 26) என்ற இளைஞரே கிருமிநாசினி அருந்தித் தற்கொலைசெய்துகொண்டவராவர். வல்வெட்டித்துறை திடீர் மரணவிசாரணை அதிகாரி திரு தி. வேலுப்பிள்ளை விசாரணையை மேற்கொண்டார். வல்வெட்டித்துறைப் பொலிசார் சாட்சிகளை ஆஜர் செய்தனர்.

இறந்தவர் மரணவிசாரணை அதிகாரிக்கு எழுதிய கடிதத்தில், தனக்கு வாழ்க்கை கசந்துவிட்டதால் இனி இவ்வுலகத்தில் வாழ விரும்பாதபடியால் நச்சுத் திராவகத்தைக் குடித்துத் தான் தற்கொலை செய்துகொள்ளப்

## ஆலயவீதிப் பிரச்னை சுமுகமாகத்தீர்க்கப்பட்டது

[பண்டத்தரிப்பு]

நீண்டகாலமாக இருந்து வந்த ஆலய வீதி சம்பந்தமான பிரச்னையொன்றை சுன்னாகம் பொலிஸ்நிலையப் பொறுப்பதிகாரி திரு பொன்னுத்துரை சுகுணேந்திரன் சமரசமாகத் தீர்த்து வைத்தார்.

புன்னாலைக்கட்டுவன் வடக்கு இராஜ ராஜேஸ்வரி அம்பாள் ஆலயத்தில் நீண்டகாலமாக இருந்துவந்த வீதிப் பிரச்னை நீதிமன்றம் செல்லும் அளவுக்குப் பெரும் பிரச்னையாக இருந்துவந்தது. பொறுப்பதிகாரி திரு சுகுணேந்திரன் மேற்படி ஆலயத்தைச் சேர்ந்த அர்ச்சகர் பிரம்மஸ்ரீ ந. சபாரத்தினக் குருக்கள், திருவாளர்கள் க. சின்னையா, வ. குணம், செ. சின்னத்தம்பி, க. சிதம்பரநாதன் ஆகியோரையும் ஆலய வீதிக்காணியின் உரிமையாளர் திரு. க. சண்முகத்தையும் பொலிஸ் நிலையத்திற்கு அழைத்து இரு பகுதியினரும் ஏற்றுக்கொள்ளக்கூடிய சமரசத் தீர்வு ஒன்றை ஏற்படுத்தினார். இதன் பிரகாரம் மேற்படி காணி உரிமையாளர் ஆலய வீதிக்கு 8 அடி அகலமான நிலத்தை விட்டுக் கொடுப்பதையும், மேலும் இடம் தேவையானால் பணம் செலுத்திப் பெறுவது என்றும் முடிவு செய்யப்பட்டது. நீண்டகாலமாக இருந்துவந்த இந்த வீதிப்பிரச்னையை நீதிமன்றம் செல்லாமல் சமரசமாக தீர்த்துவைக்கப்பட்டதையிட்டு இப் பகுதிமக்கள் திரு. சுகுணேந்திரனுக்குப் பாராட்டுத் தெரிவிக்கின்றனர். (அ)

போவதாகவும், தனது மரணத்திற்கு வேறு எவரும் காரணம் இல்லை என்றும் குறிப்பிட்டிருந்தார்.

இறந்தவரின் மைத்துனரான சுப்பிரமணியம் உதயகுமார் உட்படப் பலர் சாட்சியமளித்தனர். தற்கொலையெனத் தீர்ப்பளிக்கப்பட்டது. [சு]


யாழ். நகரில் இன்று

**புதிய ஜவுளிக்கடை திறப்புவிழா**

அன்புடையீர்!



மங்களகரமான சித்தார்த்தி வருடம் ஆவணிமாதம் 13-ம் திகதி (29-8-79) புதன்கிழமை மு. ப. 8-10 முதல் 10-00 மணிவரையுள்ள சுபவேளையில் எமது

**வாஹினி ரெக்ஸ்ரைல்ஸ்**

ஸ்தாபனத்தை பிரபல தொழிலதிபர்

திரு. த. சண்முகலிங்கம் அவர்கள்

திறந்துவைப்பார்கள்

அத்தருணம் நண்பர்கள், ஆதரவாளர்கள், வாடிக்கையாளர்கள் அனைவரும் வருகைதந்து எம்மை மகிழ்விக்கும் வண்ணம் வேண்டிக்கொள்கிறோம்.

கொழும்புக் கிளை: வாஹினி ஸ்ரோர்ஸ், 150, மலைவீதி, கொழும்பு - 3. [3429]

க. இரத்தினசபாபதி, வாஹினி ரெக்ஸ்ரைல்ஸ், 81, பெரியகடை, யாழ்ப்பாணம்.

# ஏ. பவர் அன்ட் கொம்பனி லிமிடட்

ஏ.பவர் அன்ட் கொம்பனி லிமிடட் நிறுவனத்தார் செப்டம்பர் மாதம் 1-ம் திகதி தமது யாழ்ப்பாணக் கிளையை, மணிக்கூட்டுக்கோபுரவீதி, 5-ம் இலக்கத்தில் திறக்கும் செய்தியைமகிழ்ச்சியுடன் தெரிவிக்கின்றோம். இந்தஸ்தாபனம் யாழ்ப்பாண மாவட்டத்திலுள்ள பதிவுசெய்யப்பட்ட மொத்த விற்பனையாளருக்கு ஒரு மொத்தவிற்பனை ஸ்தாடனமாக விளங்கும். அத்துடன் ஒரு சில்லறை விற்பனை ஸ்தாபனமாகவும் செயலாற்றும். உரம், விவசாய ரசாயனப் பொருட்கள், தெளிகருவிகள், ஊலஸ்டின், துணிச்சாயங்கள், மின்விசிறிகள், ஜேக்கப் விஸ்கோத்துக்கள் முதலான எம்மிடமுள்ள எல்லாப்பொருட்களையும் இந்தஸ்தாடனத்திடமிருந்து பெற்றுக்கொள்ளலாம். 3417

அரசாங்க அனுமதிப் பத்திரத்திற்கு 50 வீத சகாய விலையில்

நீங்கள் நீண்டநாள் எதிர்பார்த்த

**மண்ணெண்ணை மேர்குறி அவுட்போட் மோட்டர்கள்**

20 H P 75 H P. அளவுகளில் சகல உதிரிப் பாகங்களும் விற்பனைக்குண்டு.

**இப்ராஹிம் ஜெபர்ஜி**

218, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். தொலைபேசி: 409

148, ஆமர் வீதி, கொழும்பு. 23857, 28864

3431

**பதவி வெற்றிடங்கள்**

**பால்மாவு பைக்கெற்றில் அடைக்கும் பெண்கள், ஆண், பெண் விற்பனையாளர்கள்.**

பல வருடகாலமாக யாழ். நகரில் முன்னணியில் உள்ள பிரபல வர்த்தக நிலையத்தில், போலந்து தேசத்தில் இருந்து இறக்குமதி செய்யப்பட்ட பால்மாவைப் பைக்கட்டுகளில் அடைப்பதற்கு நன்கு அனுபவமுள்ள நல்லொழுக்கமுள்ள பெண்கள் தேவை

மற்றும் விற்பனையாளர்களாகக் கடமையாற்றுவதற்கும் நன்கு அனுபவமுள்ள ஆண், பெண் விற்பனையாளர்கள் தேவை.

மேற்குறிப்பிட்ட வெற்றிடங்களுக்கு விண்ணப்பிக்க விரும்புவோர் தமது கல்வித்தகமை—அனுபவம்—அவர்களின் குண, நல ஒழுங்குகளை உறுதிப்படுத்துபவரின் நற்சான்றிதழ்களுடன் 06-09-79க்கு முன் விண்ணப்பிக்கவும்.

பதவி வெற்றிடம்
விளம்பரதாரர் - 57.
மே/பா. ஈழநாடு லிமிட்டெட், யாழ்ப்பாணம்.

**Patrician Industrial Institute**

குறைந்த கட்டணம்! நிறைந்த கல்வி!!

G.C.E. (O/L) படித்தவர்களுக்கு வெளிநாடு செல்ல ஓர் அரிய சந்தர்ப்பம்

- மூன்றுமாதத்தில் வெல்டிங் பயிற்சி [Electrical & Gas Welding Technology]
- ஆறுமாத காலத்தில் மோட்டமெக்கானிசம் (Motor Mechanism & Scooter Mechanism)

ஆகியவற்றின் பாடசெய்முறை வகுப்புகளும், அறிமுக வகுப்புகளும், பொறிமுறை வரைதல் வகுப்புக்களும் அளிக்கப்பட்டு தராதரப்பத்திரம் வழங்கப்படும்.

புதிய வகுப்புகள் ஆரம்பம்: 1-9-1979.

குறிப்பு: மற்றைய இடங்களிலும் பார்க்க குறைந்த கட்டணமே அறவிடப்படும்.

ஸ்கூட்டர் திருத்தல், வெல்டிங் (காஸ், எலக்றிக்) வேலைகளும் (Scooter Reparing and Welding (Gas & Electrical) செய்து கொடுக்கப்படும்.

விபரங்களுக்கு:

Patrician Industrial Institute
No 59, St Patrick's Road, Jaffna.
3408

“காவலூர் நீர்விநியோகத் திட்டம்:

# அமுல் செய்யப்படவில்லை என்பது பொருத்தமற்றது

## அபிவிருத்திச் சபையினருக்கு பண்டிதரின் விளக்கம்

(யாழ்ப்பாணம்)

ஊர்காவற்றுறை பட்டின சபையின் இரண்டாவது நீர் விநியோகத் திட்டம் நிதி ஒதுக்கப்பட்டும் அமுல்செய்யப்படாமலிருக்கிறது என்பது பொருத்தமற்றது.

இவ்வாறு ஊர்காவற்றுறை எம். பி. பண்டிதர் கா. பொ. இரத்தினம் வெளியிட்டுள்ள அறிக்கையொன்றில் தெரிவித்துள்ளார்.

ஊர்காவற்றுறை, சரவணை, நாரந்தனை அபிவிருத்திச் சபையின் தூதுக்குழுவினர் யாழ். அரசாங்க அதிபரைச் சந்தித்து சமர்ப்பித்த கோரிக்கைகளை பரிசீலனை செய்து விரைவில் நிறைவேற்றித்தருவதாகஅவர் உறுதியளித்தது தொடர்பாக வெளியான செய்திக்குப் பதிலளிக்கும்வகையில் பண்டிதர் இரத்தினம் அறிக்கை ஒன்றினை வெளியிட்டுள்ளார்.

அபிவிருத்திச் சபையினர் சமர்ப்பித்த கோரிக்கை யாவும் தமது முயற்சியால் செயற்படுத்தப்பட்டுவரும் திட்டங்களே எனவும் மீண்டும் அவை பரிசீலனை செய்யவேண்டியதில்லை என்றும் தமது அறிக்கையில் குறிப்பிட்டுள்ள திரு. இரத்தினம் வெளியிட்டுள்ள அறிக்கையின் முழு விபரம் வருமாறு:

ஊர்காவற்றுறை பட்டினசபையின் இரண்டாவது நீர்விநியோகத் திட்டத்துக்கு நிதியை நானே ஒதுக்குவித்தேன். இத்திட்டத்துக்கு எங்கிருந்து தண்ணீரைப் பெறுவது என்பதை ஆராய்ந்து முடிவுசெய்வதில் காலம்சென்றது. கடைசியாக மின்தடைமானியின் உதவியுடன் செருக்கன் சந்தியில் நீர் இருப்பதாகக் கண்டுபிடிக்கப்பட்டது. அந்த இடத்தில் இப்பொழுது ஆழ்வு ஆராய்ச்சி செய்யப்படுகிறது. அந்தக் காணியைச் சொந்தக்காரரிடம் இருந்து விரைவில் பெற்றுக்கொடுக்க இந்த அபிவிருத்திச்சபையினர் முயல்வது நல்லதாயிருக்கும். நல்லதண்ணீர் இருக்கும் இடத்தைக் கண்டுபிடிக்க உதவும் புதிய கருவியான மின்தடைமானியை நீர் வளச்சபை பெற்றுக்கொள்வதற்குஎனது முயற்சியாலேயே ரூபா 75,000 ஆயிரம் கொடுக்கப்பட்டுள்ளது.

புதிய பொலிஸ் நிலையக் கட்டிடத்துக்கு காணி ஒதுக்குவித்து நிதியைப் பெறுதற்கு இரண்டுவருடமாகத் தொடர்ந்து போராடினேன். இப்பொழுது அடுத்த ஆண்டுவரவு செலவுத் திட்டத்தில் ரூபா 1,8,10000/- ஒதுக்க நடவடிக்கை எடுப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது. இந்தக் கட்டடங்களை ஒப்பந்தத்திலெடுத்துக் கட்ட அபிவிருத்திச் சபையினர் முன்வரவேண்டும்.

ஊர்காவற்றுறை அரசினர் வைத்தியசாலைக்கு குடிதண்ணீர் கொடுப்பதற்கு ஒழாய் நீர்த்திட்டம் உருவாக்கப்பட்டுக் கிணறு வெட்டும் வேலை தொடங்கப்படவுள்ளது. இந்த வைத்தியசாலைக்கு ஒரு நோயாளர் வண்டியும் அண்மையில் பெற்றுக்கொடுக்கப்பட்டது.

மக்கள் வங்கிக் கட்டடத்துக்கு இடம் எடுத்துக் கொடுத்து இரண்டாண்டுகள் ஆகிவிட்டன. இப்பொழுது மக்கள் வங்கி அதிகாரசபை கட்டடத்துக்குப் பணம் ஒதுக்கியுள்ளதுவரை படங்களும் மதிப்பீடுகளும் தயாரிக்கப்படுகின்றன. இவற்றை மக்கள் வங்கி அதிகாரசபை அங்கீகரித்தவுடன் கட்டடம் கட்டப்படும் என எனக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

ஊர்காவற்றுறை உதவி அரசாங்க அதிபர் அலுவலகம் உட்பட ஒரு செயலகத்தை அமைப்பதற்குக் காணி எடுப்பதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. உதவி அரசாங்க அதிபர் அலுவலகக் கட்டடத்துக்கு பொது நிருவாக உள்நாட்டு அமைச்சின் அனுமதி பெறவேண்டுமெனச் சென்ற ஆண்டு அரசாங்க அதிபர் கூறி, அனுமதிக்கு எழுதினர். திரு. யோகேந்திர பொறுப்பேற்றபின்னும் மூன்றுவது நினைவூட்டலை அனுப்பினேன். ஏதும் பயன் இல்லை. அமைச்சின் செயலாளருடன் இப்பொழுது தொடர்பு கொண்டுள்ளேன். விரைவில் அனுமதியை வழங்குவதாக அவர் கூறினர்.

ஊர்காவற்றுறை வாடிவீடு திருத்தியமைக்கப்படல் வேண்டும் எனவும் அபிவிருத்திச் சபையினர் வேண்டுகோள் விடுத்துள்ளனர். இது அவர்களின் அறியாமையைக் காட்டுகிறது. இந்த அபிவிருத்திச் சபைப் பிரதிநிதிகள் சிலர் புதிய வாடிவீட்டுக்கு முன்னைய அமைச்சர் இலங்கரத்தினை அத்திவாரமிட்ட விழாவில் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியினரோடு சேர்ந்து கலந்துகொண்டவர்கள், வாடிவீட்டுக்கு மூன்று லட்சம் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது. இதைக் கட்டுதற்கு மேலும் காலந்தாழ்த்தாமல் ஒப்பந்தத்தில் கொடுக்குமாறு தந்திமூலம் திரு. யோகேந்திராவையே கேட்டுள்ளேன். இந்த அபிவிருத்திச் சபையினர் ஒப்பந்தத்தை எடுப்பித்து இதை விரைவில் கட்டினால் இது வரவேற்கத்தக்க செயலாகும்.

பல மாதங்களுக்கு முன் கச்சேரியில் நடைபெற்ற கூட்டத்தில் சின்னமடு பகுதியை மாதிரிக் கிராமமாக உருவாக்குவது என்று முடிவு செய்யப்பட்டது. நடவடிக்கைகள் விரைவாக எடுக்கப்படவில்லை. இதற்கு அரசாங்க அதிபர்களின் மாற்றங்களும் காரணமாகும்.

சுடற்கரைப்பகுதிகளில்மட்டுமன்றி மண்கும்பானிலும் அல்லைப்பிட்டியிலும் மணல் எடுப்பதையும் நிறுத்துதற்கு நடவடிக்கை எடுக்குமாறு யாழ். மாவட்ட அமைச்சரைக் கேட்டேன். நடவடிக்கை எடுக்கப்படுவதாக அறிவிக்கப்பட்டதெனினும் இன்னும் தடை முறையாக விதிக்கப்படவில்லை.

சரவணை

## கதிர்வேலாயுத சுவாமி இன்று கும்பாபிஷேகம்

பல வருடங்களுக்கு முன் தோன்றி, ஓலையால் வேயப்பெற்றுச் சிறு ஆலயமாகக் கிராம மக்களின் துயர்போக்கிப் பல வகையில் அருள் பொழிந்து வருகின்றது சரவணை கதிர்வேலாயுதசுவாமி கோவில். இதன் பூர்வீகத் தொடர்புகளைப் பொதுவாகவும், அமைவிடத்தைச் சிறப்பாகவும்கொண்ட சில அம்சங்களை அடிப்படையாகக் கொண்டு ஓர் வரையறைக்கு உட்படுத்தலாம். இக்கிராம மக்களின் ஆரம்பகால வழிபாட்டு இடமாக ஆரம்பித்து பின்னர் தொடர்ச்சியாக வளர்ச்சிபெற்று வந்ததெனக் கருதக் கூடலாம்.

பூசைகள் முதலில் உள்ளூர் மக்களினால் ஏற்படுத்தப்பட்டு பூசாரி நியமனம்பெற்றதுடன் கிரமமான பூசைகள் ஆரம்பித்தன. தற்பொழுது இவ்வாலயத்தின் குருவாக இருக்கும் ஸ்ரீ யோகேஸ்வரக் குருக்கள் சிறு பராயத்திலிருந்தே பற்றுடையவராகவும் தந்தையாரின் கடமையைத் தொடர்ந்து செய்பவராகவும் விளங்குகின்றார். இங்கு நடைபெறும் உற்சவங்களைத் தொகுத்து நோக்கின் முருகனின் திருவிழாக்கள் பாரிய அளவில் இடம்பெறுதவிட்டாலும் சிறிதளவில் யாவும் இடம்பெறுகின்றன. குறிப்பாகச் சிவராத்திரிவிழா, கந்தசஷ்டிவிழா, நவராத்திரிவிழா என்பனவும் நாயன்மார்கள் குருபூசைகளும் நிகழ்கின்றன. ஆலயத்தின் உற்சவதினமாக 1958ம் ஆண்டு கும்பாபிஷேகத்தைத் தொடர்ந்து கதிர்காமக் கந்தனின் இறுதிப்பத்துத் தினங்களும் இடம்பெற்றுவருவது குறிப்பிடத்தக்கதாகும். தற்பொழுது புனருத்தாரணம் செய்யப்பட்டு இன்றைய தினம் மகா கும்பாபிஷேகம் இடம்பெறுகின்றது.

அாற் கிராம மக்களால் ‘சரவணை மடம்’ என அழைக்கப்பெற்ற இவ்வாலயம் முருகனின் வெற்றிச் சின்னமாகிய வேல் அமைந்த கோவிலாக வழிபடப்பட்டுக் கிராமத்தின் வளர்ச்சிக்கு வித்திட்டது. வெற்றிவேல் என்ற திருச்சின்னத்திற்கு வணக்கம் செலுத்தும் நோக்கில் வேல் வணக்கம் தோற்றம் பெற்றதாயின் சரவணைக் கிராமத்தின் வளர்ச்சிக்கும் சிறப்பின் ஆரம்பத்திற்கும் முருகனின் வெற்றி வேல் காரணமாகியது எனலாம்.

---சரவணையூர் பாலன்

## சிறையும் அபராதமும்

[புலோலி]

கத்தியால் குத்தி காயமேற்படுத்தியதாகப் பருத்தித்துறை பொலிசாரினால் தொடரப்பட்ட வழக்கொன்றில் முதலாம்எதிரிக்கு 6 மாதச்சிறைத் தண்டனையும் 300 ரூபா அபராதமும், ஏனைய நான்கு எதிரிகளுக்கும் தலா 100 ரூபா அபராதமும் விதிக்கப்பட்டுள்ளது.

கரவெட்டி கல்லோலையைச் சேர்ந்த பார்க்கண்டு என்பவரை க. செல்லையன், ஆ. சின்னத்தம்பி, பொ. கண்டுத்துரை. செ. இராசு, செ. செல்வராசா ஆகியோர் கத்தியால் குத்திக் காயம் விளைவித்தார்கள் எனப் பருத்தித்துறை பொலிசாரினால் தொடரப்பட்ட வழக்கு பருத்தித்துறை நீதவான் திரு. கே. ஞானச்சந்திரன் முன்னிலையில் விசாரணை செய்யப்பட்டது.

எதிரிகளைக் குற்றவாளியாகக் கண்ட நீதவான் முதலாம் எதிரிக்கு ஆறு மாதச் சிறைத் தண்டனையும் 300 ரூபா அபராதமும், ஏனைய எதிரிகளுக்கு தலா 100 ரூபா அபராதமும் விதித்து தீர்ப்பளித்தார். [க]

## நோய்க்கொடுமையால் நடன ஆசிரியை தற்கொலை

[நெல்லியடி]

நோயின் கொடுமையைத் தாங்கமுடியாத மூன்று பிள்ளைகளின் தாயொருவர் நச்சுத்திராவகம் அருந்தித் தற்கொலை செய்துகொண்டார்.

பருத்தித்துறை மெதடிஸ்த உயர்தர பெண்கள் பாடசாலையில் ஆசிரியராகக் கடமையாற்றிய திருமதி ஆ. பங்கையற்செல்வி என்பவரே இவ்வாறு தற்கொலை செய்துகொண்டவராவார். 32 வயதுடைய இவ்வாசிரியை நடன சங்கீதஆசிரியராக பணியாற்றிவந்தவராவார்.

இவரது மரண விசாரணை பருத்தித்துறை நீதிமன்றத்தில் நீதவான் திரு. கே. கே. பாலசுப்பிரமணியம் முன்னிலையில் நடைபெற்றது. மரணவிசாரணை அதிகாரிக்கும் கணவருக்கும், மற்றையோருக்கும் காலஞ்சென்றவரால் எழுதப்பட்ட கடிதங்கள் சமர்ப்பிக்கப்பட்டன.

பருத்தித்துறைப் பொலிஸ் நிலைய கான்ஸ்டபிள் ஜே. பியசேன சாட்சிகளை ஆஜர் செய்தார். காலஞ்சென்றவரின் சகோதரர் கே. குணேந்திரராஜா கணவர் ஆழ்வாப்பிள்ளை டாக்டர் எஸ். சுதிரவேற்பிள்ளை ஆகியோர் சாட்சியமளித்தார்கள். முடிவில் தற்கொலை எனத் தீர்ப்பளிக்கப்பட்டது. [அ]

சித்தங்கேணிக்கொலை

## சந்தேக நபர்களுக்குப் பிணைபற்றி செப்.4ல்தெரியும்

[மாவிட்டபுரம்]

சித்தங்கேணி கொலைச் சந்தேக நபர்களை பிணையில் விடுவதா இல்லையா என்பதுபற்றி ஆராய அடுத்தமாதம் 4ம் திகதிக்கு மல்லாகம் மஜிஸ்திரேட் நீதிபதி ஒத்திவைத்தார்.

சித்தங்கேணியைச் சேர்ந்த செல்லர் சின்னத்துரை என்பவர் 15-5-79ல் துப்பாக்கியால் சுட்டும் கத்தியால் வெட்டியும் கொலை செய்யப்பட்டது தொடர்பாக அவ்விடத்தைச் சேர்ந்த செல்லர் சின்னத்தம்பி, சின்னத்தம்பி குணம், சின்னத்தம்பி விஜயசிங்கம் ஆகியோர் நீதிமன்றத்தில் சரண் புகுந்து விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்தனர்.

இவர்கள் நேற்று முன்தினம் மல்லாகம் நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்பட்ட சமயம் சந்தேகநபர்கள் சார்பில் சட்டத்தரணிகள் ஆர். ஜே. செல்வரத்தினம், ஆர். ஈ. தம்பிரத்தினம், செல்வி மோகனாம்பிகை செல்வரத்தினம் ஆகியோர் ஆஜராகி சந்தேக நபர்களை பிணையில் விடுமாறு கோரினர்.

புதிய சட்டத்தின் பிரகாரம் இந்நபர்களை 3 மாதங்களுக்கு மேல் றிமாண்டில் வைத்திருக்க முடியாதெனவும் சட்டத்தின் கீழ் அட்டோர்ணி ஜெனரல் இவர்கள் மீதான விசாரணையை ஆரம்பிக்க உத்தரவிட்டிருக்க வேண்டுமெனவும் அப்படிச் செய்யாமையால் இவர்களை பிணையில் விடுமாறும் சட்டத்தரணிகள் கோரினர்.

அச்சமயம் இந்நபர்கள் மீதான நடவடிக்கை குறித்து யாழ் மேல்நீதிமன்றத்தில் பொலிசார் மனு ஒன்றைத் தாக்கல் செய்துள்ளதாக பொலிசார் தெரிவித்தனர்.

அதன் முடிவு வந்த பின்னர் இவர்களை பிணையில் விடுவதா இல்லையா என்பதை முடிவுசெய்ய வழக்கை அடுத்த மாதம் 4ம் திகதிக்கு நீதிபதி ஒத்திவைத்தார். [அ]

## ஐவர்குழு தெரிவு

(அளவெட்டி)

அளவெட்டி மல்லாகம் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் 2வது பொதுக்கூட்டம் சங்கமண்டபத்தில் தலைவர் திரு. க. நாகலிங்கம் தலைமையில் நடைபெற்றது.

இக்கூட்டத்தில் கூட்டுறவு உதவி ஆணையாளருடன், காரியாலயப்பரிசோதகர் எம். எஸ். தர்மலிங்கமும் கூட்டுறவுப் பரிசோதகர் திரு. க. குமாரசாமியும் பிரசன்னமாயிருந்தனர். உதவி ஆணையாளர் கிளைக்குழுவின் கடமைகளைத் தெளிவுபட எடுத்துக் கூறினர்.

எண்பத்தொரு கிளைக்குழு அங்கத்தவர்கள் கூட்டத்தில் சமுகம் அளித்திருந்தனர். இயக்குநர் சபைத் தெரிவுக்கு பதினொருபேர் போட்டியிட்டதில் இரகசிய வாக்கெடுப்பு நடைபெற்று திருவாளர்கள் நா. பாலசுப்பிரமணியம், க. நாகலிங்கம், கு. கந்தசாமி, க. அருளானந்தம், பொ. தம்பிராசா ஆகியோர் ஐவர் குழுவாக வெற்றிபெற்றனர். விரைவில் தலைவர் தெரிவு நடைபெறும். [அ]

## நினைவாஞ்சலி

[யாழ்ப்பாணம்]

காரைநகரைச் சேர்ந்தவரும் மலாயாவில் கல்வி அமைச்சராகப் பணிபுரிந்து அண்மையில் காலமான சர் இளவ்துரைசிங்கத்தின் நினைவாஞ்சலிக் கூட்டம் ஒன்றை காரைநகர் சைவ மகாசபையினர் சைவ மகாசபை மண்டபத்தில் அடுத்த மாதம் 2-ம் திகதி காலை நடத்தவுள்ளனர்.

இதில் முத்தமிழ் வித்தகி செல்வி நல்லபிள்ளை நாகமுத்து, வித்துவான் மு. சபாரத்தினம் உட்படப் பலர் உரையாற்றுவர். பண்ணிசைப் புலவர் திரு எஸ். ஆர். திருஞானசம்பந்தன் குழுவினரின் பண்ணிசைக் கச்சேரியும் இதில் இடம்பெறவுள்ளது. [ஈ]

## தெரிவு

[சரவணை]

சரவணை பயிர்ச்செய்கை உற்பத்தியாளர் கூட்டுறவுப் பிரிவு சமநலச் சேவை இயக்குநர் தெரிவு நேற்று சரவணை இ. மு. சங்க மண்டபத்தில் நடைபெற்றது.

திரு. வை. குருமூர்த்தி தலைமையில் நடைபெற்ற இக்கூட்டத்தில் நுணுக்கல் கிராமசபை உறுப்பினரான திரு. இ. நடேசபிள்ளை சரவணை சமநலசேவை சபைக்கு உறுப்பினராக ஏகமனதாகத் தெரிவுசெய்யப்பட்டார். [●]

## யாழ்.பரி.யோவானுக்கு வெற்றிக்கேடயம்

(கிரிக்கெட்)

அகில இலங்கைக் கல்லூரிகளின் கிரிக்கெட் சங்கத்தினால் நடாத்தப்பட்ட 1978-ம் ஆண்டுக்கான கல்லூரிகளுக்கான கிரிக்கெட் போட்டியில் வடபிரதேசத்தில் நடைபெற்ற போட்டிகளில் மிகவும் சிறந்த கோஷ்டியாக தெரிவு செய்யப்பட்ட யாழ் பரி. யோவான் கல்லூரியின் 14 வயதுக்குட்பட்ட கிரிக்கெட் கோஷ்டி மிகவும் சிறந்த கோஷ்டிக்கான வெற்றிக்கேடயத்தைச் சுவீகரித்துக்கொண்டது. இப்பரிசளிப்பு கடந்த வாரம் கொழும்பில் நடைபெற்றது.

## பாதயாத்திரை

(யாழ்ப்பாணம்)

நாளை மறுதினம் வெள்ளிக்கிழமை அதிகாலை 2-30 மணியளவில் சூராவத்தை முத்துமாரியம்மன் கோவிலிலிருந்து செல்வச்சந்நிதி முருகன் ஆலய 10-வது மகோற்சவத்துக்கு அவ்வூர் பஜனைக் கோஷ்டியினர் 22-வது பாதயாத்திரையைமேற்கொள்வார்கள்.

# 'அரசின் ஒத்துழைப்புடனே கோரிக்கைகளை வெல்லலாம்'

## மருந்து கலவையாளர்கள் சங்கக் கூட்டத்தில் கருத்து

(பண்டத்தரிப்பு)

"இன்றைய அரசியல் சூழ்நிலையில் பதவியிலிருக்கும் அரசாங்கத்திற்கு ஆதரவும் ஒத்துழைப்பும் வழங்குவதன் மூலமே தொழிற்சங்கங்கள் தமக்கு நியாயமான கோரிக்கைகளை வென்றெடுக்கக் கூடியதாக இருக்கிறது. இந்நிலையில் எமது சங்கம் சுகாதாரத் திணைக்களத்திலுள்ள ஐக்கிய தேசியக்கட்சியின் தொழிற்சங்க சம்மேளனத்தின் ஆதரவுடன் சுகாதார அமைச்சிடம் மருந்து கலவையாளர்களின் முக்கிய பிரச்சினைகள் அடங்கிய 12 கோரிக்கைகளை அண்மையில் சமர்ப்பித்துப் பேச்சுவார்த்தை நடாத்தியுள்ளது" என்று அரசாங்க மருந்துகலவையாளர் சங்க யாழ். மாவட்டக் கிளையின் 9-வது வருடாந்தப் பொதுக்கூட்டத்தில் கலந்து கொண்டு உரையாற்றுகையில் தாய்ச் சங்கத்தின் பொதுச் செயலாளர் திரு ரி பி விக்கிரமசிங்கா குறிப்பிட்டார்.

கிளைச் சங்கத் தலைவர் திரு வே நடராசா தலைமையில் யாழ்நகரில் நடைபெற்ற இக் கூட்டத்தில் யாழ் மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளிலுமிருந்து பெருந்தொகையான மருந்து கலவையாளர்கள் கலந்து கொண்டனர். தாய்ச்சங்கத் தலைவர் திரு ஏ பிரேமதாஸ இக் கூட்டத்தில் உரையாற்றுகையில் யாழ் மாவட்டக் கிளைச் சங்கம் தமது பகுதி உறுப்பினர்களின் நலன் கருதி அயராது உழைத்து வருவது குறித்து தாம் மிகவும் மகிழ்ச்சியடைவதாகத் தெரிவித்தார். கிளைச் செயலாளர் திரு என் எம் கந்தசாமி நன்றி தெரிவித்துப் பேசினார்.

இக் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட முக்கிய தீர்மானங்கள் வருமாறு:

"மருந்து கலவையாளர்களுக்கு விதிக்கப்பட்டுள்ள சித்தி தேர்ச்சி நிபந்தனை வகுப்புத் தரத்திலிருந்து மூன்றாம் வகுப்பாகக் குறைக்க வேண்டும்.

"யாழ் மாவட்டத்திலுள்ள சகல அரசினர் மருந்துச் சாலைகளிலும் சாதாரண தொழிலாளர்கள் நியமிக்கப்படவேண்டும்.

"லீவு எடுப்பதிலுள்ள கஷ்டங்களைப் போக்கு முகமாக மற்றைய மாவட்டங்களில் உள்ளதைப்போல நிரந்தர பதில் மருந்து கலவையாளர்களை நியமிக்க வேண்டும்."

புதுவருட நிர்வாகிகளாகப் பின்வருவோர் தெரிவு செய்யப்பட்டனர்:

தலைவர் திரு வே நடராசா செயலாளர் திரு நா மா கந்தசாமி பொருளாளர் திரு இ திருநாவுக்கரசு

திரு நா மா கந்தசாமி 9வது தடவையாக இச்சங்கத்தின் செயலாளர் பதவியை வகிப்பது குறிப்பிடத்தக்கது. [வ]

பொன்னாலை, சங்கானை பெண் கடத்தல்:

# யாழ். மேல் நீதிமன்றத்தில் செப். 10ம் திகதி விசாரணை

(மாவிட்டபுரம்)

பொன்னாலை, சங்கானை ஆகிய இடங்களில் இடம்பெற்ற பெண்கடத்தல் சம்பவங்கள் தொடர்பான விசாரணை அடுத்தமாதம் 10-ம் திகதி யாழ் மேல் நீதிமன்றத்தில் விசாரணைக்கெடுக்கப்படவுள்ளது.

மூளாயைச் சேர்ந்த பி இரத்தினசிங்கம், கே. தெய்வேந்திரம், வே சிவலிங்கம், கே. பூபாலசிங்கம், எம் சதாசிவம், ஆகியோர் மீது பொன்னாலையில் வைத்து சண்முகம் சுசீலா என்னும் இளம் பெண்ணை பலாத்காரமாக கடத்திச் சென்றதாக குற்றம் சாட்டப்பட்டுள்ளது.

சங்கானையைச் சேர்ந்த மூ தாகரத்தினம், ச திருநாவுக்கரசு, ச. சோதிலிங்கம் ஆகியோர் மீது சங்கானையைச் சேர்ந்த நடராசா இராசேஸ்வரி என்னும் இளம் பெண்ணைக் கடத்திச் சென்றதாகக் குற்றம் சாட்டப்பட்டுள்ளது.

இவ்விரு வழக்குகளும் ஆரம்பத்தில் மல்லாகம் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டு, உயர் நீதிமன்றத்துக்கு பாரப்படுத்தப்பட்டவையாகும். செப்டம்பர் 10ம் திகதி யாழ் மேல் நீதிமன்றத்தில் நீதிபதி திரு ஜமீல் முன்னிலையில் விசாரணைக்கெடுக்கப்படவுள்ளது.

இரு வழக்குகளிலும் எதிரி தரப்பில் சட்டத்தரணிகள் ஆர் ஜே செல்வரத்தினம், செல்வி மேனாந்தி செல்வரத்தினம் ஆகியோர் ஆஜராகின்றனர்.

அரசதரப்பில் சட்டத்தரணி பி. தவராசா வழக்கை நடத்துவார்.

## சுழிபுரம் கி. ச. வீதிகள் திருத்த நடவடிக்கை

(சுழிபுரம்)

சுழிபுரம் கிராமசபை விசேஷ ஆணையாளர் திரு ச. ஞானப்பிரகாசம் கிராமசபைப்பகுதியிலுள்ள வட்டாரங்கள் தோறும் உள்ள இரண்டு வீதிகளைத் திருத்தச் செய்ய நடவடிக்கை எடுத்துள்ளார். இவ் வேலையை தேசிய இளைஞர் சேவை மன்றத்துடன் இணைந்து நடாத்த நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. இதற்கான நிதி ஒதுக்கீடுகளும் செய்யப்பட்டுள்ளன. இத்திருத்த வேலைகளைச் செய்வதற்கு 15 வயதுக்கும் 30 வயதுக்கும் உட்பட்ட இளைஞர்கள் ஒவ்வொரு வட்டாரத்திலிருந்தும் அழைக்கப்பட்டுள்ளனர். இச்சேவையில் ஈடுபடும் இளைஞர் பட்டியலை சமர்ப்பிக்கும் கடைசித் திகதி இன்றாகும். [வ]

# கட்பெரீஸ் போண்விற்றுப்போட்டியில் ஒவ்வொரு மாதமும் 4 பரிசுகள் வெல்லுங்கள்




சொப்பர் சைக்கிள்

ஒவ்வொரு விடையுடனும் உள்ளேயுள்ள இந்த தகரத்தகடு அனுப்பப்பட வேண்டும்.

ரீவீ செற்

சுய இயக்க றைஸ் குக்கர்

தையல் மெஷின்

இவை நாலும் இம் மாதம் உங்களுக்குக் கிடைக்கலாம். கட்பெறீஸ் போண்விற்ரு சுவைமிக்க, சொக்லேற் உணவுப் பானம், இதில் பால், கொக்கோ, முட்டை, குளுக்கோஸ், மோல்ற் ஆகியன உண்டு. சூடாகவோ, குளிராகவோ நாளுக்கு இரண்டு தடவை உட்கொண்டால், நாள் முழுவதுமே திடகாத்திரத்துடனிருக்கலாம்; குடும்பத்திலுள்ள அனைவருக்கு மேற்றது.

அத்துடன், ஒவ்வொரு ரின்னும் உங்களுக்கு ஒவ்வொரு மாதமும் நாலு பரிசுகள் வெல்ல சந்தர்ப்பமளிக்கிறது.

விதிகள்

எத்தனை விடைகளும் அனுப்பலாம் ஆனால் ஒவ்வொன்றுடனும் கட்பெறீஸ் போண்விற்று ரின் உள்ளே இருக்கும் தகடு இணைக்கப்படவேண்டும்.

மாதம் முழுவதும் கிடைக்கும் விடைகள் ஒன்று சேர்க்கப்பட்டு, அடுத்த மாதம் முதலாவது வேலை நாளன்று அதிஷ்ட இழுப்பில் திறக்கப்படும் முதலாவது சரியான விடைக்கு பரிசு வழங்கப்படும்.

பரிசிழுப்பின் பின்னர் 7 நாட்களுக்குள் பரிசு பெறுபவரின் பெயர் பத்திரிகைகளில் வெளியிடப்படும்.

டெல்மேஜ் ஃபோர்சைத் அன்ட் கொ. லி., கறட்ஸ் அட்வேற்றைசிங் ஆகிய தாபனங்களில் வேலைபார்ப்பவர்களும், அவர்களது குடும்பத்தினரும் இப்போட்டியிற் கலந்து கொள்ள முடியாது.

நடுவர்களின் தீர்ப்பே இறுதியானது. இது சம்பந்தமாகக் கடிதப்போக்குவரத்து நடத்தபடவோ, விசாரணைகள் ஏற்றுக் கொள்ளபடவோ மாட்டாது.

போட்டி: இடது கோடியிலுள்ள எழுத்துக்களை மாற்றி எழுதினுல் சுவைமிக்க உணவுப்பானமொன்றின் பெயர் வரும். வலது பக்கத்திலுள்ள அடைப்புகளில் அதனை எழுதவும்

| வி | போ | ரு | ற் | ண் | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|

எனக்குப் பரிசு கிடைத்தால் நான் விரும்புவது:

பெயர்: __________

விலாசம்: __________

திகதி __________

இக் கூப்பனை உள்ளேயுள்ள தகட்டுடன் அனுப்ப வேண்டிய விலாசம்:
கட்பெறீஸ் போண்விற்று போட்டி,
த. பெ. எண். 45, கொழும்பு.

S 220

## தமிழ் மறைத் தேர்வு

(யாழ்ப்பாணம்)

அகில இலங்கைத் தமிழ் மறைக்கழகத்தினரால் ஆண்டு தோறும் நடாத்தப்பெறும் தமிழ்மறைத் தேர்வு இவ்வாண்டு புரட்டாதி மாதம் 8ந் திகதி சனிக்கிழமை காலை 9 மணிக்குப் பல்வேறு நிலையங்களிலும் நடைபெறவிருக்கிறது. தொடக்கப் பிரிவு, கீழ்ப் பிரிவு, மத்திய பிரிவென மூன்று பிரிவுகளிலும் ஆயிரத்துக்கதிகமானவர்கள் இத்தேர்வில் கலந்துகொள்கின்றனர்.

இவ்வாண்டு முதன்மை பெறும் தேர்வினர்களுக்கு அடுத்த வருடம் நடைபெறும் மாநாட்டில் சிறப்பு விருதுகள் வழங்கப்படும். [வ]

## குளம் புனரமைக்க நடவடிக்கை

(பண்டத்தரிப்பு)

சண்டிலிப்பாய்-மாகியப்பிட்டி கிராம அபிவிருத்திச் சங்கம், சண்டிலிப்பாய் வட-தென் மேற்கு உதவி அரசாங்க அதிபர் பிரிவிலுள்ள மூன்று குளங்களைச் சிரமதான மூலம் ஆழமாக்கிப் புனரமைப்புச் செய்வதற்கு நடவடிக்கை மேற்கொண்டுள்ளது. [ச]

## இலவசக் கலைவிழா

(பண்டத்தரிப்பு)

சிறுவிளான் ஞானவைரவர் இளைஞர் நாடகமன்றத்தின் கலைவிழா எதிர்வரும் முதலாந் திகதி சனிக்கிழமை மாலை சிறுவிளான் ஞானவைரவர் ஆலயத்திற்கு அருகாமையில் நடைபெறவுள்ளது திரு. மா. உதயகுமார் தலைமையில் நடைபெறும் இக்கலைவிழாவில் இன்னிசை, நடனம், நாடகங்கள் என்பன நடைபெறவுள்ளன. [வ]

## அனுதாபம்

(சரவணை)

டாக்டர் என். எம். பெரேராவுக்கு அனுதாபம் தெரிவிக்கும் தீர்மானம் ஒன்றை சரவணைக்கிராம அபிவிருத்திச் சங்கம் நிறைவேற்றியுள்ளது.

ஐரிஷ் விடுதலை வீரர்களின்

# குண்டு வீச்சுக்கே

# மவுண்பேட்டன் பலியானர்

## பிரிட்டிஷ் அரசு குற்றச்சாட்டு; பேரனும் மரணம்; நால்வருக்கு காயம்

(லண்டன்)

ஐரிஷ் தேசிய விடுதலை முன்னணியினரின் குண்டுவீச்சிலேயே மவுண்பேட்டன் பிரபு வயது [79] மரணமானர் என பிரிட்டிஷ் அரசு தெரிவித்துள்ளது.

அயர்லாந்தின் மேற்குப்பகுதியில் உள்ள தமது ஓய்வுகால விடுதிக்கு அண்மையில் உள்ள ஏரியில் தமது குடும்பத்தினருடன் படகு ஒன்றில் சென்று கொண்டிருக்கையிலேயே இவ்விபத்து இடம்பெற்றது.

இவ்விபத்தில் மவுண்பேட்டனின் 14 வயதும் பேரன் செல்வன் நிகலஸும் பலியானர். இச்சம்பவத்தில் காயமடைந்த ஏனைய நால்வரும் உறவினர்களில் மூவர் ஆபத்தான நிலையில் உள்ளனர் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

மவுண்பேட்டன் பிரபுவின் சடலம் கரைக்கு எடுத்து வரப்பட்டபோது உருக்குலைந்த நிலையில் காணப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

இதேவேளையில் கொரில்லாக்களின் இந்நடவடிக்கை குறித்து ஐரிஷ் அரசு பலத்த கண்டனம் தெரிவித்துள்ளது. [இ]

## 22 பேர் பலி!

புதுடில்லி, ஆக 28

பஞ்சாப் மாநிலத்தில் நிகழ்ந்த பஸ்விபத்து ஒன்றில் 22 பேர் பலியாகியுள்ளனர் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

வாய்க்கால் ஒன்றில் பஸ் விழுந்ததால் விபத்து ஏற்பட்டது. 18 பேர் ஸ்தலத்திலேயே மரணமானர்கள். 34 பேருக்கு படுகாயம் ஏற்பட்டுள்ளது. [இ]

# மவுண்ட்பேட்டனுக்கு இந்தியாவில் தனிஇடமுண்டு

## சஞ்சிவரெட்டி அனுதாபம்

புதுடில்லி, ஆக 28

இந்தியாவின் முதலாவது கவர்னரான மவுண்ட்பேட்டன் பெரும் துயர்தரும் விபத்து ஒன்றில் மரணமடைந்தார் என்ற திடீர் செய்திகேட்டு அதிர்ச்சி அடைந்தேன்.

இவ்வாறு இந்திய ஜனதிபதி திரு நீலம்சஞ்சீவ ரெட்டி மவுண்ட்பேட்டனின் மறைவு குறித்து பிரிட்டிஷ் மகாராணியாருக்கும் இளவரசர் பிலிப்புக்கும் அனுப்பியுள்ள அனுதாபச் செய்தியில் தெரிவித்துள்ளார்.

மிகத்துயரமான இந்நேரத்தில் பிரிட்டிஷ் மக்களின் வேதனையில் இந்திய மக்கள் அனைவருமே பங்கு கொண்டுள்ளார்கள் என்றும் திரு. ரெட்டி தமது செய்தியில் தெரிவித்துள்ளார்.

இந்தியாவுக்கு சுதந்திரத்தை அளித்த பணியில் பெரும் பங்கு வகித்த மவுண்ட்பேட்டனுக்கு இந்திய மக்களிடையே தனிஇடம் உண்டு என்றும் திரு ரெட்டி தமது செய்தியில் தெரிவித்துள்ளார்.

[7-ம் பக்கம் பார்க்க]

# 'ஜனதா-எஸ்' - காங்கிரஸ் ஒரு கட்சியாகும்?

## பெயர்சூட்டுவதில் கருத்து வேறுபாடு

புதுடில்லி, ஆக 28

இந்திய மதசார்பற்ற ஜனதாகட்சியையும் உத்தியோக பூர்வ காங்கிரஸ் கட்சியையும் இணைக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுவருகிறது.

இந்த இணைப்பு நடவடிக்கைக்கு இருகட்சிகளிலும் ஆதரவும் எதிர்ப்பும் இருப்பதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இருகட்சிகளும் ஒரு கட்சியாக இணைக்கப்படுமானால் புதிய கட்சிக்கு என்ன பெயர் வைப்பது என்பதிலேயே இருகட்சிகளுக்குள்ளும் கருத்து வேறுபாடு இருந்துவருவதாகவும் தெரிவிக்கப்பட்டது. [இ]

## உடன்பாடு

புதுடில்லி, ஆக 28

'ஜனதா - எஸ்' — காங்கிரஸ் கூட்டணி ஐந்து இடதுசாரிக்கட்சிகளுடன் தேர்தல் உடன்பாடு ஒன்றைச் செய்துள்ளது. புதுடில்லியில் நேற்று நடைபெற்ற 7 கட்சிகளினது ஒருங்கிணைப்புக் கூட்டத்திலேயே இத்தேர்தல் ஒப்பந்தம் மேற்கொள்ளப்பட்டது.

ஊக்கத்தை ஏற்படுத்தும்

# 'தங்கநூல்' போன்றது மவுண்ட்பேட்டனின் வாழ்க்கை

## தட்சர் அனுதாபம்

லண்டன், ஆக 28

இந்த நூற்றாண்டின் பிரிட்டிஷ் வரலாற்றில் சேவை மனப்பான்மையையும் ஊக்கத்தையும் ஏற்படுத்தும் 'தங்கநூல்' போல் அமரர் மவுண்ட்பேட்டனின் வாழ்க்கை அமைந்திருந்தது.

இவ்வாறு பிரிட்டிஷ் பிரதமர் திருமதி மார்கிரெட் தட்சர் தமது அனுதாபச் செய்தியில் தெரிவித்துள்ளார்.

மவுண்ட்பேட்டன் பிரபு யுத்தத்திலும் சமாதானத்திலும் மிகச்சிறந்த பொதுநல ஊழியராக விளங்கினுரென்று முன்னுள் பிரிட்டிஷ் பிரதமர் திரு எட்வர்ட் ஹீத் தமது அனுதாபச் செய்தியில் தெரிவித்துள்ளார். [இ]


வீடு கட்டுதல், சுவர் எழுப்புதல், தரை அமைத்தல்...

எதுவாயினும் பாவியுங்கள்



மேசன் வேலைக்கான சீமெந்து

மேசன் வேலைக்கான சீமெந்து, வீட்டு நிர்மாணத்தில் ஒரு புதுமையாகும். இது சிக்கனமானது; மலிவானது. சீமெந்துக்கான அமெரிக்க தர நிர்ணயத்துக்கு இணங்கியது. போர்ட்லண்ட் சீமெந்தைப் போலவே இதனையும் பாவிக்கலாம். சீமெந்து / மணல் விகிதாசாரம் போர்ட்லண்ட் சீமெந்துக்குப் போலவேயாகும். மேசன் வேலைக்கான சீமெந்துக்கு சுண்ணும்பு தேவையில்லை. மணல், சீமெந்து, தண்ணீர் இவை மூன்றுமே போதும். கலவை பூரணமாகிவிடும்.

மேசன் வேலைக்கான சீமெந்து கொண்டு கட்டடச் செலவைக் குறையுங்கள்;

- கொங்கிறீட் வேலைக்குப் பயன்படுத்தக்கூடாது. 50 கி. கிறும் கொண்ட ஒரு பை மேசன் வேலைக்கான சீமெந்தின் விலை
- புத்தளம் அல்லது காங்கேசன்துறைத் தொழிற்சாலையிலிருந்து ரூபா 17/90
- காலி தொழிற்சாலையிலிருந்து ரூபா 20/80.

இலங்கை சீமெந்துக் கூட்டுத்தாபனம்

தபால் பெட்டி 1382, சுதந்திர சதுக்கம், கொழும்பு- 7. தொலைபேசி: 95628. 95801-4.

மனோகரா தினசரி 10-30, 2-30, 6-30, 9-45
(யாழ். நகர்)
சிவாஜி-கே. ஆர். விஜயா
இருமலர்கள்

REGAL (Jaffna) 3rd CROWDED WEEK LAST FEW DAYS
Daily 10-30, a. m. 2-00, 4-30, 7-00 p.m; only
THE OMEN
"ஆவிகளின் அட்டகாசம்"
(வயது வந்தவர்களுக்கு மட்டும்)
(FOR ADULTS ONLY)

வெலிங்டன் (யாழ்ப்பாணம்) தினசரி 2-30, 6-30 & 9-45;
றிவோல்வர் ரீட்டா

லிடோ (யாழ். நகர்) போன் 7698 தினசரி 4 காட்சிகள்
கல்யாணபரிசு
(புதிய பிரதி)

3-வது வெற்றி வாரம்
SRIDHAR-Jaffna ஸ்ரீதர்
at 10-30 a m, 3-00, & 7-30 p.m;
CECIL B. DEMILLE'S
பிரமாண்டமான வெளியீடு!
TEN COMMANDMENTS
பத்துக் கட்டளைகள்
(புதிய டெக்னிக் கலர்—ஆங்கிலம்)
Color
Starring; Two Great Stars
CHARLTON HESTON — YUL BRYNNER

ராணி (யாழ். நகர்) தினசரி 10-30, 2-30, 6-30; 9-45
ஜெமினி-தேவிகா
சுமைதாங்கி
(புதிய பிரதி)
கதை, வசனம், டைரக்ஷன்: ஸ்ரீதர்

ராஜா (யாழ். நகர்) தினசரி 4 காட்சிகள்
எம்.ஜி.ஆர்.-ஜெயலலிதா-நாகேஷ் நடித்த
அன்னமிட்டகை
(புதிய பிரதி)

SHANTHI JAFFNA. Phone: 7642
Daily 10-30, 2-30, 4-45, 7-00, & 9-30 P. M.
"Butterflies are Free" —Color
A Family Entertainment—More Suitable For Adults
30-8-79 நிதியுதவிக்காட்சி
10-30 & 2-30 எம். ஜி ஆரின் திருடாதே

வின்ஸர் தினசரி 4 காட்சிகள்
யாழ்ப்பாணம் காலை 10-30, பி.ப.2-00, மாலை 6-00, இரவு 9-30
(டென்னிஸ்றிய நடிகர்) (கோமாளிகள் புகழ்)
எஸ். வி. சுப்பையா, ஜெயா, மீரா, ராம்தாஸ்
உதயகுமார்
நடித்த
மாமியார் வீடு
கதை-வசனம்-டைரக்ஷன்: கே வெங்கட்

## வல்லிபுர ஆழ்வார் உற்சவ ஏற்பாடு

[புலோலி]

துன்னாலை ஸ்ரீ வல்லிபுர ஆழ்வார் ஆலயவருடாந்த மகோற்சவத்தையொட்டி இவ்வாலயத்திற்கு வருகை தரவுள்ள அடியார்களுக்கும் பாதுகாப்பு, சுகாதாரம், போக்குவரத்து, குடிதண்ணீர் வசதிகளைச் சிறப்பாக ஏற்படுத்துமுகமாக பருத்தித்துறை உதவி அரசாங்க அதிபர் திரு. வை. வேலும்மயிலும் தலைமையில் அரசாங்க அதிகாரிகளைக் கொண்ட மாநாடொன்று நடைபெற்றது.

உற்சவ காலங்களில் சந்நிதானத்தில் தங்கியிருக்கும் அடியார்களின் நலன்கருதி யாழ் விற்பனை அபிவிருத்தித் திணைக்களத்தினர் தற்காலிக விற்பனைக் கடை ஒன்றை நிறுவுவதற்கும் பருத்தித்துறை இ. போ. ச. டிப்போவினர் உற்சவ காலங்களில் திறமையான பஸ்சேவைகளை ஒழுங்கு படுத்தவேண்டிய நடவடிக்கைகளையும் மேற்கொண்டுள்ளனர்.

அடுத்த மாதம் 20-ம் திகதி கொடியேற்றத்துடன் இவ்வாலயவருடாந்த மகோற்சவம் ஆரம்பமாகி ஒக்டோபர் மாதம் 4-ம் திகதி ரதோற்சவமும், 5-ம் திகதி சமுத்திரத்தீர்த்த உற்சவமும் நடைபெறும். மறுநாள் 6-ம் திகதி கேணித் தீர்த்தோற்சவத்துடனும் இவ்வாலய உற்சவம் முடிவடையும். [வ]

## சாரணர் சிரமதானம்

[யாழ்ப்பாணம்]

கொக்குவில் இந்துக் கல்லூரிச் சாரணர்கள் கொக்குவில் மேற்கு மஞ்சவனப்பகுதி ஆலயத்தைச் சிரமதான மூலம் துப்புரவு செய்தனர். ஆலய வருடாந்த மகோற்சவம் நடைபெறுவதை முன்னிட்டு சாரணர் தலைவர்கள் க. தயாளன், ந. அரிராசா ஆகியோர் தலைமையில் மேற்படி சிரமதானம் நடைபெற்றது. [கொ]

## மவுண்ட்...

(6-ம் பக்கத் தொடர்ச்சி)

சரண்சிங் அனுதாபம்

இந்தியா சிறந்த நண்பர் ஒருவரை இழந்து விட்டது என்று காபந்து பிரதமர் திரு சரண்சிங் பிரிட்டிஷ் பிரதமர் திருமதி மார்கிரெட் தட்சருக்கு அனுப்பியுள்ள அனுதாபச் செய்தியில் தெரிவித்துள்ளார்.

இந்தியாவின் முன்னாள் பிரதமர்கள் திரு மொரார்ஜி தேசாய், திருமதி இந்திரா காந்தி ஆகியோரும் அனுதாபச் செய்தி அனுப்பியுள்ளனர். [இ]

RIO (Jaffna- TwonHall)
Phone: 7697
4th & FINAL WEEK
Daily 4 Shows
DRIVER

வெலிங்டன்?
வெல்லி
சாவகச்சேரி
தினசரி 6-30, 9-30
சனி, ஞாயிறு 2-30
சிவாஜி-சௌகார்ஜானகி
பார் மகளே பார்

நாகம்ஸ் (சுன்னாகம்)
தினசரி 6-30, 9-30
சனி ஞாயிறு 2-30
ரவிச்சந்திரன்-
கே. ஆர் விஜயா
மேஜர் மீனாட்சி

# தொழிலில் நஷ்டம்; இளைஞர் தற்கொலை

(கோண்டாவில்)

தொழில் செய்து நஷ்டமடைந்த இளைஞர் ஒருவர், தொடர்ந்தும் கஷ்டத்துடன் வாழ விரும்பாததால் நச்சுத் திராவகம் அருந்தி தற்கொலை செய்துகொண்டார்.

இப்பரிதாப சம்பவம் ஆனைக்கோட்டைப் பொலிஸ் பகுதியைச் சேர்ந்த சமரப்பிள்ளை வீதியில் நடைபெற்றுள்ளது.

மரண விசாரணை ஆனைக்கோட்டையிலுள்ள மரணமானவரது இல்லத்தில் நடைபெற்றபோது மரணமானவரின் தந்தை சாட்சியமளிக்கையில் கூறியதாவது:

எனது மகன் சண்முகம் தோட்டம் செய்து நஷ்டப்பட்டுள்ளார். மேலும் தோட்டம் செய்யப் பணம் இல்லாததால் தனியார் பாதுகாப்புச் சேவையில் சேர்ந்து கடமைபுரிந்தார். தோட்டச் செய்கையில் ஈடுபட்டபோது பட்ட கடனை அடைக்க முடியவில்லையே என்று மிகவும் கவலையடைந்திருந்தார். அவர் வசதியுடன் இருந்த காலத்தில் அவரது நண்பர்களுக்கு பல உதவிகளைச் செய்திருந்தபோதும் கஷ்டப்பட்ட வேளையில் அவரது நண்பர்கள் அவருக்கு உதவ முன்வரவில்லை என்று வேதனையும் அடைந்திருந்தார்.

அவருக்கு எதிராக வழக்கு ஒன்றும் இருந்தது. எல்லா வேதனைகளும் ஒன்றுசேர்ந்தே அவரைத் தற்கொலை செய்து கொள்ளவைத்தது" என்றார்.

விசாரணை நடத்திய மரண விசாரணை அதிகாரி திரு எஸ் அமிர்தலிங்கம் தற்கொலை எனத்தீர்ப்பளித்தார்.

ஆனைக்கோட்டை பொலிஸ் கான்ஸ்டபிள் ஜபார் சாட்சிகளை ஆஜர் செய்தார். [கு]

# இன்றைய பலன்

ஆவணி மாதம் 13ம் திகதி

புதன்கிழமை

[29-8-1979]

மேடம்: ஏமாந்த நேரத்தில் உங்களை வீழ்த்தி விடுவதற்குச் சிலர் திட்டம் போடுவார்கள், எந்தச் சந்தர்ப்பத்திலும் விழிப்புணர்ச்சியுடன் இருப்பது விரும்பத்தக்கது கூட்டணியில் பிளவுக்கு இடமுண்டு தனிமை நன்று.

இடபம்: குடும்பம் இன்று உங்கள் கோவிலாக மாறும் இசைத் துறையில் இன்று ஆர்வம் ஏற்படும், பிள்ளைகளினால் பெருமைக்கு இடமுண்டு.

மிதுனம்: எதிர்பார்த்த இனங்களில் தடைகள் ஏற்பட்டுவரும் தொழில் துறை இவ்வளவு திருப்தி அளிக்கக் கூடியதாக இல்லை நண்பர்களின் நச்சரிப்பு அதிகரிக்கும் பிறந்தகத்தின் ஞாபகம் தலைதூக்கும் அவசரத்தைத் தவிர்க்கவும்.

கடகம்: புதிய நம்பிக்கையுடன் வாழ்க்கையை ஆரம்பிப்பீர்கள் தெய்வத்தின் அருள்கிடைக்கும் தங்கள் செயற்திறமை மற்றவர்களைத் திகைக்கவைக்கும். தொழிலிலும் வெற்றி உண்டு.

சிங்கம்: புண்ணியகாரியங்களில் அதிக ஈடுபாடு ஏற்படும், பொதுத்துறையில் அதிக ஆர்வம் காட்டுவீர்கள் இல்லத்திலும் இனிமைக்கு இடமுண்டு மகிழ்ச்சிகரமான தினம்.

கன்னி: பணம் தேடும் படலத்தில் வெற்றிக்கு இடமுண்டு. பாவையர்கள் சினேகமும் கிடைக்கலாம். பெண்களாயின் கட்டுப்பாட்டுடன் நடந்துகொள்ளவேண்டும் கண்காணிப்பு பலமாக இருக்கும்

துலாம்: வாழ்க்கையே ஒரு புதிராகத் தோன்றும், செலவினங்கள் உச்சக்கட்டத்தை அடையும், புதிதாக எதையும் ஆரம்பியாதிருப்பது நன்று குடும்பத்தில் சந்தேகம் தலைதூக்காது பார்க்கவும்.

விருட்சம்: உள்ளத்தில் அடித்தளம் வரை கண்ணீர் வடிக்கும் வாழ்க்கையில் தனிமரமாகிவிட்ட எண்ணம் உருவாகும் குடும்பத்தில் தொல்லைகளுக்கு இடமுண்டு எதையும் தாங்கும் இதயம் வேண்டும்.

தனு: மனை வாழ்வில் மகிழ்ச்சிகரமான சம்பவங்கள் இடம்பெறும் நீண்ட நாள் பிணி நீங்குவதற்கும் இடமுண்டு. போதுமென்ற மனம் உங்களுக்குப் பெருமையைத் தேடித்தரும். மேடைப் பேச்சாளர்கள் சிறப்படைவர்.

மகரம்: சிறிவரும் கோபம் பெரிய மோதல்களை ஏற்படுத்தும் எதிரிகளின் சூழ்ச்சிகளும் பலமாக இருக்கும் சிலருக்கு எதிர்பாராத விதமாக உடல் நலம் பாதிக்கப்படும்பொறுமை வேண்டும்.

கும்பம்: கொள்வனவுகளில் நல்லதிருப்பம் ஏற்படும் வணிகர்களுக்கு வியாபார விருத்தியுண்டு கல்வித்துறையில் முன்னேற்றம் தென்படும். அறிஞர்கள் ஆதரவும் தாராளமாகக்கிடைக்கும்.

மீனம்: புகழ்தரும் காரியங்களில் ஈடுபடுவீர்கள் அரசியல்வாதிகளுக்கு நல்ல ஆதாயம் கிடைக்கும் எடுத்த கருமத்தை முடிப்பதில் வெற்றியடைவீர்கள் பெரியோர் ஆசியும் கிடைக்கும்.

சோதிடக்கலாநிதி

திருமலை ச. வேலுப்பிள்ளை

## 8 பேருக்கும் அபராதம்!

[புலோலி]

சட்டவிரோதமாகப் பனைமரங்களைக் கடத்திவந்த எட்டு நபர்களுக்கும் தலா 150 ரூபா அபராதம் விதிக்கப்பட்டதுடன் கடத்திவரப்பட்ட பனை மரங்களும் பறிமுதல் செய்யப்பட்டன.

ஏ. விஜயதாசா, எஸ். இராசேந்திரா, பி. சுப்பையா, எஸ். தயானந்த, பி. குமார், எஸ். கணேஸ், கே. ஜெயராசா, எம். இராசமணி என்போரே சட்டவிரோதமாகப் பனை மரங்களைக் கடத்திச் சென்றதாக குற்றம் சாட்டப்பட்டிருந்தது.

இவர்கள் கரவெட்டியில் வைத்து அகப்பட்டுக்கொண்டதையடுத்து பருத்தித்துறைப் பொலிசார் இவர்களை நீதவான் கே. ஞானச்சந்திரன் முன்னிலையில் ஆஜர்செய்தனர்.

நீதவான் தலா ரூபா 150 அபராதம் விதித்து கடத்திவரப்பட்ட மரங்களையும் பறிமுதல்செய்ய உத்தரவிட்டார்.

மரங்களை ஏற்றிவந்த உழவு இயந்திரத்தின் உரிமையாளர் இந்த உழவு இயந்திரத்தை ஏன் பறிமுதல் செய்யக்கூடாது என்பதற்குக் காரணம் காட்டவேண்டுமென்றும் உத்தரவிட்டார். [வ]

## நாகர்கோவில் கப்பல் திருவிழா

[புலோலி]

சரித்திரப் பிரசித்திபெற்ற நாகர்கோவில் பூர்வீக நாகதம்பிரான் ஆலய சம்புரோக்ஷண மகா கும்பாபிஷேகத்தையொட்டி மண்டலாபிஷேகம் நடைபெற்றுவருகிறது.

இங்கு கடந்த ஏழுவருடகாலமாக நடைபெறாதிருந்து வந்த 'நாகதம்பிரான் கப்பல் திருவிழா' இவ்வருடம் நடைபெறவுள்ளதாக அறிவிக்கப்பட்டது [வ]

# "நினைவுச்சின்னங்களை நாம் ஏன் எழுப்புகின்றோம்"

## திறப்புவிழாவில் 'யோகேஸ்' விளக்கம்

(மட்டுவில்)

"நாட்டிற்கும் சமூகத்திற்கும் தொண்டுசெய்யத் தமமை அர்ப்பணித்த மகான்களுக்கும் தொண்டர்களுக்கும் நினைவுச்சின்னம் எழுப்புவதின் மூலம், இந்நாட்டின் பெருமை உயருகிறது. அது மட்டுமல்ல எதிர்கால சமுதாயத்திலும் இந்த மகான்களின் அடிச்சுவட்டைப் பின்பற்றி ஆயிரமாயிரம் தொண்டர்கள் தியாகிகளும் தோன்றிக் கொண்டிருப்பார்கள்"

இவ்வாறு யாழ்ப்பாணம் எம் பி திரு. வெ யோகேஸ்வரன் சாவகச்சேரி, சங்கத்தானை பெரிய அரசடியில், அமரர் திரு வி முத்துக்குமாருவுக்கு நினைவுச்சின்னமாக எழுப்பப்பட்ட, பஸ் தரிப்பு மண்டபத்தைத் திறந்துவைத்துப் பேசுகையில் கூறினார். கைத்தறி நெசவாலை அதிபர் திரு எஸ் நவரத்தினம் தலைமையில் இத்திறப்புவிழா நடைபெற்றது

சாவகச்சேரி நகரபிதா திரு எம் கே திரவியநாயகம் மங்கள விளக்கேற்றிவைக்க நகரசபை உறுப்பினர் திரு எஸ் கே மயில்வாகனம் வரவேற்புரை நிகழ்த்த, தென்மராட்சிப் பிரிவு உதவி அரசாங்க அதிபர் திரு கே துரைராஜா அமரர் முத்துக்குமாருவின் திருவுருவப்படத்திற்கு மலர்மாலை சூட்ட, யாழ். எம் பி திரு யோகேஸ்வரன் நாடாவை வெட்டி திறந்து வைத்தார்.

திரு வெ யோகேஸ்வரன் தொடர்ந்து தனது உரையில் கூறியதாவது!

"அமரர் முத்துக்குமாரு கிராமசபை உறுப்பினராக இருந்து நல்ல சேவை செய்துள்ளார் அவரின் சேவையை மதிக்குமுகமாக தென்மராட்சி மக்கள் அவருக்கு நினைவுமண்டபம் எழுப்பியுள்ளனர். இதன் மூலம் தென்மராட்சி மக்களின் மதிப்பு உயருகிறது" என்றார்.

## 'எம்மிடையே நிலவும் ஏற்றத்தாழ்வை ஒழிப்போம்''

### வெள்ளிவிழாவில் 'அமிர்'

(சங்கானை)

"பண்டைய மன்னர்களும், மக்களும் அறுபத்துநான்கு கலைகளையும் கற்று இன்று மதிநுட்பமுள்ளவர்களாகவும் வீரம் செறிந்தவர்களாகவும் வாழ்ந்தனர்" என்று எதிர்க்கட்சித்தலைவரும் தமிழர் விடுதலைக்கூட்டணி செயலதிபருமான திரு. அ. அமிர்தலிங்கம் கூறினார்.

வடலியடைப்பு கலைவாணி சனசமூகநிலைய 25வது ஆண்டு நிறைவு வெள்ளி விழாவில் கௌரவ விருந்தினராகக் கலந்து உரையாற்றிய அவர் மேலும் கூறியதாவது!

"அன்றைய மன்னர்கள் அன்பிற்கு அடிமையாகவும், பண்பாகவும் வாழ்ந்தனர். மானத்தை இழந்து, வடுவை ஏற்காது எமது இனம் அன்று பெருமையுடன் இருந்தது. இன்றோ சாதி, சமயம், குலம் போன்றவற்றைப் பார்க்கிறோம். இதனால் பிளவு ஏற்படுகிறது!

"தமிழ் எழுத்துக்கள் பொறிக்கப்பட்ட கணி ஒன்று நியூசிலாந்தில் கண்டெடுக்கப்பட்டது! சிந்துவெளி நாகரிகம், மெசப்பெத்தோனியா, பாபிலோனியா போன்ற இடங்களில் எல்லாம் கண்ட ஆராய்ச்சிகளில், உலகில் திராவிடம் பரந்து இருந்தது என்பதை காட்டியுள்ளது இவை எல்லாம் எமக்கு சான்றாக அமைந்துள்ளன நாம் மிக சாவதானமாகவும் விவேகத்தைப் பயன்படுத்தியும் வாழவேண்டும். நாம் எடுக்கும் முடிவு மக்கள் எம்மீது வைத்துள்ள நம்பிக்கைக்கு ஒருபோதும்பாதகமாக இருக்கமாட்டாது, உங்கள் நம்பிக்கைக்கு என்றும் தகுதி வாய்ந்தவர்களாவோம். இனி மேலாவது எம்மத்தியில் சாதி, மத பேதங்களை மறந்து வாழ பெரியோர், சிறியோர் முக்கியமாக எதிர்கால இளைஞர் சமுதாயம் ஒன்றுபட்டு உழைக்க வேண்டும்" என்றார்

ஆண்டு நிறைவுவிழா திரு. சி மகாலிங்கம் தலைமையில் ச ச நிலைய மைதானத்தில் நடைபெற்றது. பிரதமவிருந்தினராக வட்டுக்கோட்டை எம் பி திரு தா திருநாவுக்கரசு கலந்துகொண்டார்

தலைவர் தமதுஉரையில் கலைவாணி ச ச நிலையம் ஆரம்பகாலம் தொட்டு வளர்ந்த வகையையும் அது கிராமத்திற்காற்றியசேவையையும் குறிப்பிட்டார் 'திருமதிமங்கையர்க்கரசியும் பேசினார். நிலையத்தினரின் "பாசத்தின் ஒளி", "புதுமணம்" ஆகிய நாடகங்கள் இடம்பெற்றன.

## பொன்விழா

[சுழிபுரம்]

தொல்புரம்-மூளாய் ஐக்கிய பரஸ்பர சகாய சங்கப் பொன்விழா அடுத்த மாதம் முதலாம் திகதி மூளாய் சைவப்பிரகாச வித்தியாசாலை மண்டபத்தில் நடைபெறவுள்ளது. பிரதம அதிதிகளாக எதிர்க்கட்சித்தலைவர் திரு அ அமிர்தலிங்கம், வட்டுக்கோட்டைத்தொகுதி பாராளுமன்ற உறுப்பினர் திரு த திருநாவுக்கரசு, கூட்டுறவு ஆணையாளர் ஆகியோர் கலந்துகொள்கின்றனர், சங்க ஆண்டுவிழாவும் இதைத் தொடர்ந்து நடைபெறும்.



## தேவை

நெசவு வேலையில் நன்கு அனுபவமுள்ள பெண்கள் தேவை. தொடர்பு கொள்ளவும். S. R S, நெசவு நிலையம், 212, கே. கே. எஸ், வீதி, யாழ்ப்பாணம்.

3434

எங்கள் வேலைப்பகுதிக்கு உடனடியாக மேசன் கூலி தேவை கீழ்க்காணும் விலாசத்துக்கு 5-9-79க்கு முன்பாக தபால் மூலம் மனுச்செய்யவும். அருள்தாசன் மூத்ததம்பி, அரசடி ரோட், நவாலி தெற்கு, மானிப்பாய்

3435



## ஆசிரியர்களுக்கான ஞானஒடுக்கம்

[அரியாலை]

யாழ்ப்பாணப் பகுதியைச் சேர்ந்த அங்கிலிக்கன் திருச்சபையைச் சேர்ந்த ஆசிரியர்களுக்கான ஞான ஒடுக்கம் எதிர்வரும் சனிக்கிழமை மருதனாமடம் கிறிஸ்தவ சேவா ஆச்சிரமத்தில் நடைபெறவிருக்கிறது யாழ்ப்பாண ஆர்ச்டீக்கன் அருட்திரு கனம் சாம் டி ஹொர்சிங்டன் அடிகளார் இந்த ஞான ஒடுக்கத்தை நடத்துவார்

காலை 8 மணியளவில் நடைபெறும் விசேட ஆராதனையுடன் ஆரம்பமாகும் இந்த ஞான ஒடுக்கம் மதியபோசனத்துடன் முடிவடையும்.

## லொறி மோதி விவசாயி பலியானார்!

(மட்டுவில்)

இரண்டு பிள்ளைகளின் தந்தையும், விவசாயியுமான 39 வயது நபர் லொறியில் மோதுண்டு ஸ்தலத்திலேயே மரணமானார்.

குஞ்சுப்பரந்தனைச் சேர்ந்த குமாரசாமி சுப்பிரமணியம் என்பவரே குஞ்சுப்பரந்தன் வீதியில் லொறியில்மோதுண்டு இவ்விதமாக மரணமானார்.

நாவற்குழி உணவுக்களஞ்சியத்திலிருந்து பூநகரி பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்திற்கு உணவுப் பங்கீட்டரிசி ஏற்றிச்சென்ற லொறியே இந்த நபரை மோதியதாகக் கூறப்படுகின்றது

இதுபற்றிப் பொலிசாருக்கு புகார் செய்யப்பட்டதைத் தொடர்ந்து கிளிநொச்சி பொலிசார் லொறியைத் தேடிச் சென்று சங்குப்பிட்டியில் வைத்துக் கைது செய்தனர்

கிளிநொச்சி நீதவான் முன்னிலையில் லொறிச்சாரதியும் கிளீனரும் ஆஜர் செய்யப்பட்டனர் நீதவான் அவர்களை விளக்கமறியலில் வைக்கும்படி உத்தரவிட்டு விசாரணையை ஒத்திவைத்தார்.

மத்தியகிழக்குச் செல்லவிருந்தவர்

## துலா முறிந்து தலையில் விழுந்து மரணம்!

(யாழ்ப்பாணம்)

கிணற்றில் குளித்துக் கொண்டு நின்ற ஒருவரின் தலையில் துலா முறிந்து விழுந்ததால் மரணமானார்

இப்பரிதாபச் சம்பவம் நேற்று முன்தினம் திருநெல்வேலியிலுள்ள கம்பன் ஒழுங்கையில் நடைபெற்றது. சுப்பிரமணியம் சண்முகவடிவேலு என்பவரே இவ்வாறு மரணத்தைத் தழுவியவராவார்.

யாழ். ஆஸ்பத்திரியில் நடைபெற்ற மரண விசாரணையின் போது இறந்தவரின் மனைவி சாட்சியமளிக்கையில் கூறியதாவது!

காலஞ்சென்ற எனது கணவர் கொக்குவில் புகையிரத நிலையத்திற்கு முன்பாக கடை வைத்து நடாத்தி வந்தார். வருமானம் போதாமையினால் மத்தியகிழக்கு நாட்டிற்குச் செல்வதற்கு தனியார் ஸ்தாபனம் ஒன்றின் மூலம் ஒழுங்கு செய்திருந்தார். இவ்வருடம் முடிவதற்குள் வெளிநாடு செல்வதாக இருந்தார் சம்பவ தினம் குளித்துவிட்டுக் கடைக்குப் போவதற்காக கிணற்றடிக்குச் சென்றார். தண்ணீர் அள்ளும்போது துலா முறிந்து விழுந்து பண்டை உடைந்த நிலையில் ரத்தவெள்ளத்தில் கிடந்தார். அவரை ஆஸ்பத்திரிக்கு கொண்டுசென்ற போது மரணமானார்.

பதில் மரணவிசாரணை அதிகாரியும், பதில் நீதிபதியுமான திரு. எஸ் அமிர்தலிங்கம் விபத்து மரணமெனத் தீர்ப்பளித்தார். (கொ-அ)

## கருத்தரங்கில் கலந்துகொள்வர்

(யாழ்ப்பாணம்)

அகிலஇந்திய இளைஞர் பெருமன்றத்தின் உதவிச் செயலாளர்களில் ஒருவரும், தமிழ் மாநிலச் செயலாளருமான . து. ராஜா இன்று யாழ்ப்பாணத்திற்கு வருகை தருகின்றார்.

நாளை மாலை 4 மணிக்கு யாழ். கம்யூனிஸ்ட் கட்சிக் காரியாலயத்தில் நடைபெறும் கருத்தரங்கொன்றில் இவர் கலந்துகொள்வார்.

அண்மையில் கியூபா நாட்டில் இடம்பெற்ற இளைஞர் மகாநாட்டில் இவர் கலந்து கொண்டார் என்பது குறிப்பிடத்தக்கது. [கா]

யாழ்.பஸ்

1-ம் பக்கத் தொடர்ச்சி

மானார்!

இப்பரிதாப சம்பவம் நேற்றுக் காலை யாழ் பஸ்நிலையத்தில் நிகழ்ந்தது.

இவரது மரணம் தொடர்பான விசாரணை யாழ் ஆஸ்பத்திரியில் நடைபெற்றபோது, மரணமான தம்பிப்பிள்ளை திருநாவுக்கரசு (72 வயது) மாவிட்டபுரத்திலுள்ள பெரிய மதவடியைச் சேர்ந்தவரென்றும், இவருக்கு எட்டுபிள்ளைகள் உண்டென்றும் இவர் புகையிரத இலாகாவில் பிரதம லிகிதராக கடமையாற்றி ஓய்வு பெற்றவர் என்றும், சம்பவ தினம் மருந்து வாங்குவதற்காக யாழ் நகருக்கு வந்தாரென்றும் விசாரணையின் போது தெரிவிக்கப்பட்டது. உரணியைச் சேர்ந்த வீரகத்தி ஐயாத்துரை சாட்சியமளிக்கையில் கூறியதாவது!

நேற்றுக்காலை, யாழ்ப்பாணத்தில் இருந்து சுன்னாகத்திற்குச் செல்வதற்காக யாழ் பஸ்நிலையத்திலுள்ள 769-ம் இலக்க பஸ்ஸில் நிறைய பிரயாணிகள் இருந்ததால், சாரதி பஸ்ஸை எடுக்க முற்பட்டார் 769-ம் இலக்க பஸ்ஸிற்கு முன்னால் ஒரு பஸ் ஆட்களை ஏற்றிக் கொண்டு நின்றது. பின்னாலும் ஒருபஸ் வந்து நின்றது பின்னால் நின்ற பஸ்ஸை மேலும் சிறிது தூரம் பின்னால் எடுக்கும்படி பஸ் காப்பாளர் கூறினார், பஸ் பின்னால் எடுக்கப்பட்டது, எங்கள் வரிசையில் நின்ற பஸ் பின்னோக்கிச் சென்றுவிட்டு முன்னோக்கி வந்தது, அவ்வேளையில் ஒருவர் ஓடிவந்து பஸ்ஸில் ஏற முற்பட்டபோது பஸ்ஸுக்கும் பஸ்தரிப்பிலுள்ள மின்கம்பத்திற்குமிடையில் அகப்பட்டு நெரிந்த நிலையில் அவர் நிலத்தில் விழுந்தார், அப்போது அவருடைய மூக்கின் கன்னபகுதிகள் இரண்டும் நசிந்திருந்தது தெரிந்தது. அவர் இரத்த வெள்ளத்தில் துடிதுடித்துக் கொண்டிருந்தார்.

கார் ஒன்று வரவழைக்கப்பட்டு, மரணமானவரை யாழ் ஆஸ்பத்திரிக்குக் கொண்டு சென்றனர், பிற்பகல் நான் குறிப்பிட்ட பஸ்ஸின் காப்பாளரைக் கண்டு விசாரித்தபோது விபத்துக்குள்ளானவர் இறந்துவிட்டதாகவும், சாட்சி சொல்ல வரும்படியும் கூறினார்' என்றார்

வேறுபலரும் சாட்சியமளித்தனர்

விசாரணை நடத்திய மரண விசாரணை அதிகாரியும் உதவி போலீஸ் மற்ற நீதிபதியுமான திரு எஸ் எஸ் பிராங்கிளின், பஸ்சாரதிவீரசிங்கம் தங்கபாலசிங்கம், காப்பாளர் சிதம்பரப்பிள்ளை சுப்பிரமணியம் ஆகிய இருவரையும் இம்மாதம் 31-ம் திகதிவரை விளக்கமறியலில் வைக்கும்படி உத்தரவிட்டு, பிரேத பரிசோதனை நடத்துமாறு சட்ட வைத்திய அதிகாரியைப் பணித்து மேல் விசாரணையை இம்மாதம் 31-ந்திகதிக்குஒத்திவைத்தார்.

போக்குவரத்துப் பகுதிப் பொலிஸ் பொறுப்பதிகாரி இன்ஸ்பெக்டர் சேனாதிராசா கான்ஸ்டபிள் எஸ் இரத்தினசபாபதி ஆகியோர் சாட்சிகளை ஆஜர் செய்தனர். [வோ]

## பகிஷ்கரிப்பு...

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

ஆகையினால் நிலைமை நன்கு ஆராயப்பட்டு எமது பாராளுமன்றக்குழு மேற்கொண்ட இறுதி முடிவுக்கிணங்க பாராளுமன்றப் பகிஷ்கரிப்பைக் கைவிடுவதென்று தீர்மானிக்கப்பட்டுள்ளது" என்று கருத்து வெளியிட்டார்.

வவுனியா விவகாரம் சம்பந்தமாக அரசினால் எடுக்கப்பட்ட புதிய தீர்மானம் எதுவும் அமுல் படுத்தப்படமாட்டாது என்றும், வவுனியா, பழைய நிலையிலேயே தொடர்ந்து இருக்கும் என்றும் இது சம்பந்தப்பட்ட அரசு உத்தியோகத்தர்களுக்கு தெளிவாக்கப்பட்டுள்ளதாகவும் அண்மையில் பாராளுமன்றத்தில் அரசினால் நிறைவேற்றப்பட்ட தீர்மானம் முற்றாக வாபஸ் பெறப்படலாமென்றும், இதுசம்பந்தமான புதிய தீர்மானம் பாராளுமன்றத்தில் விரைவில் தாக்கல் செய்யப்படலாம் என்றும் அறியப்படுகிறது. (கி)

## மரண அறிவித்தல்

### பிரம்மஸ்ரீ சுப்பிரமணியஐயர்

கோப்பாயைச் சேர்ந்த பிரம்மஸ்ரீ சுப்பிரமணிய ஐயர் காலமாகிவிட்டார். இவர் காலஞ்சென்ற ஐயாத்துரைக் குருக்கள் (கோலம்பூர்) சகோதரரும் லட்சுமி அம்மாளின் அன்புக்கணவரும், கணேசசர்மா, சண்முகரத்தினசர்மா (ஆசிரியர், சோமாஸ்கந்தாக்கல்லூரி, புத்தூர்) ஸ்ரீதரன் (நெசவு ஆசிரியர்), சாரதாம்பாள், கமலாம்பாள் ஆகியோரின் தந்தையாரும் வைத்தீஸ்வரசர்மா (ரத்தோட்டை) நடராஜசர்மா (யாழ் கச்சேரி) மங்களாம்பாள் நாகலட்சுமி அம்மா பத்மாவதி, லோகேஸ்வரசர்மா (கொழும்புத்துறை) வரதராஜசர்மா (சவூதிஅரேபியா) நடேசசர்மா (கொக்குவில்) ஆகியோரின் மாமனாரும், கணேசக்குருக்களின் (அராலி) சகலனும், குக்குமணியம்மாவின் மைத்துனரும் ஆவார். அன்னாரின் ஈமக்கிரியைகள் இன்று (29-8-79) புதன்கிழமை மாலை 3 மணிக்கு கோப்பாய் வடக்கில் நடைபெறும். உறவினர்களும் நண்பர்களும் இதனை ஏற்றுக் கொள்ளவும்.

3436

இப்பத்திரிகை 'ஈழநாடு' லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேற்குவீதி 63-ம் இலக்க அச்சகத்தில் 1979ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 29-ந் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.
Registered as a Newspaper at the General Post Office Sri Lanka under No: GB/8948/78 The Eelanadu P B No. 49; Telegeram Eelanadu, Phone 389